2012 அக்டோபர் 31] [பேரவைத் தலைவர்]

முற்பகல் 11-15

சட்டமன்ற உறுப்பினர்கள் ஒரு மாநில முதலமைச்சரைச் சந்திக்கவுள்ள அடிப்படை நடைமுறையைக்கூட கடைப்பிடிக்காமல், அதைப்பற்றி நான் பல முறை எடுத்துச் சொல்லியும் கேட்காமல், என்னிடம் ஒரு கடிதத்தைத் தந்துவிட்டு, உள்நோக்கத்துடன் பேட்டி அளித்துள்ளதாகத் தெரிகிறது. எனவே, இப்பிரச்சினையில் மேலெழுந்தவாரியாகப் பார்க்கிறபொழுது அவை உரிமை மீறல் இருப்பதாகத் தெரிவதால், பேரவை விதி 226-ன்கீழ் அதுகுறித்து ஆய்ந்து அறிக்கை அளிப்பதற்காக அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைக்கிறேன்.

(ஆ) தே.மு.தி.க. உறுப்பினர்கள் இருவர் பேரவை லாபியில் தன்னைத் தாக்க முற்பட்டதாக உறுப்பினர் திரு. ஆர். சுந்தர்ராஜன் அளித்துள்ள புகாரை அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பிவைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆர். சுந்தர்ராஜன் அவர்கள் 29-10-2012 அன்று பேரவைக் கூட்டத்தில் கலந்துகொண்டு வெளியில் வரும்பொழுது அவரைப் பேரவை லாபியிலே வைத்து தே.மு.தி.க. உறுப்பினர்கள் திரு. ப. பார்த்தசாரதி மற்றும் திரு. க. தினகரன் ஆகியோர் தரக்குறைவாகப் பேசியதாகவும், அவரது சட்டையைப் பிடித்துத் தாக்க முற்பட்டதாகவும், எனவே, தனக்குத் தகுந்த பாதுகாப்பு அளிக்க நடவடிக்கை எடுப்பதோடு, தனது உரிமையைப் பாதிக்கும் வகையிலே மேற்கூறிய உறுப்பினர்கள் செயல்பட்டதாகவும், அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கும்படியும் தன்னுடைய கடிதத்திலே திரு. ஆர். சுந்தர்ராஜன் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்கள். இப்பிரச்சினையில் மேலெழுந்தவாரியாகப் பார்க்கிறபொழுது அவை உரிமை மீறல் இருப்பதாகத் தெரிவதால், பேரவை விதி 226-ன்கீழ் அதுகுறித்து ஆய்ந்து அறிக்கை அளிப்பதற்காக அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைக்கின்றேன்.

திரு. துரைமுருகன், சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். பேரவைத் தலைவரின் முடிவிற்குப் பின்னர், அதன்மீது மேற்கொண்டு எதுவும் பேசக்கூடாது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவை உரிமைக் குழுவில் உங்கள் உறுப்பினர்கள் இருக்கிறார்கள். இதன்மீது ஏதாவது சொல்ல கட்சி வேண்டுமென்றால், அங்கு சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) என்னுடைய தீர்ப்பிற்குப் பின்னர் நீங்கள் மேற்கொண்டு பேசுவதற்கு வாய்ப்பு இல்லை. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். திரு. துரைமுருகன், பேசுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

[2012 அக்டோபர் 31

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு விவரம் குறித்து மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் அந்தப் பிரச்சினையை உரிமைக் குழுவிற்குக் கொண்டு சென்ற பின்னர், அது குறித்து கருத்துச் சொல்வதற்கோ, விவாதிப்பதற்கோ இங்கு இடமில்லை. அவர் ஏதாவது கருத்துகள் சொல்ல வேண்டுமென்றால், சம்பந்தப்பட்ட உறுப்பினரிடம் சொல்லி, அவர் உரிமைக் குழுவில் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

2. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

(ஆ) தமிழகத்தில் நிலவும் மின்சாரப் பற்றாக்குறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன், பேசுங்கள்.*

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்வெட்டினால் நாடு என்ன நிலையில் இருக்கிறது என்பதைத் தாங்களும் அறிவீர்கள், நாடும் அறியும். ** (குறுக்கீடுகள்) இது குறித்து விவாதிப்பதற்காகவும், அதேபோல, ** (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உறுப்பினர்கள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அதற்குப் பதில் சொல்லவிருக்கிறார்கள்.*

திரு. துரைமுருகன்: *அதேபோன்று, ** நாங்கள்* adjournment motion *கொடுத்திருக்கிறோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் என்னிடம் கேட்கும்போது மின்சாரம் குறித்துக் கேட்டீர்கள். மின்சாரம் குறித்து மட்டும் பேசுங்கள். ** குறித்துப் பேசவேண்டாம். மின்சாரம் குறித்து மட்டும் பேசுங்கள். ** குறித்துப் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.*

திரு. துரைமுருகன்: *அதுகுறித்துப் பேசுவதற்கு இந்த அவையிலே நேரம் ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மின்சாரம் குறித்துப் பேசியது தவிர மற்றவையெல்லாம் நீக்கப்படுகின்றன. மாண்புமிகு*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*